செ.வெ.எண்: 03 நாள்: 01.12.2020

**கரூர் மாவட்டம்**

**நடக்க இயலாத நிலையில் தனியாக வசிக்கும் முதிவர்கள், மாற்றுத்திறனாளிகள் நியாய விலைக்கடைகளில் பொருட்கள் பெற பிரதிநிதியை நியமித்துக்கொள்ளலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர ்கள் தகவல்**

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:**

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் 2013 -ன் கீழ் கரூர் மாவட்டத்தில் நேரடியாக நியாய விலை அங்காடிகளுக்கு சென்று பொருட்கள் வாங்க இயலாதவர்கள் பயன்பெறும் வகையில் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கான பிரதிநிதிகளை நியமிகத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வயது மூப்பு காரணமாக உடல் நலக்குறைபாடுடைய நிலையிலோ அல்லது நடக்க இயலாக நிலையிலோ உள்ள முதிவர்கள் மற்றும் நடக்க இயலாத நிலையில் உள்ள மாற்றுதிறனாளிகள் போன்ற நபர்கள் நபர்கள் அவர்கள் தனி நபர்களாக வசிக்கும் பட்சத்தில் மட்டும் தனக்கான ஒரு பிரதிநிதியை நியமனம் செய்து அவர் வாயிலாக நியாய விலைக் கடைகளில் உணவுக்கான பொருட்களைப் பெற்றுச் செல்லும் வகையில், சம்மந்தப்பட்ட நியாயவிலைக்கடைகளில் உரிய அங்கீகாரச் சான்று படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து சம்மந்தப்பட்ட நியாய விலைக் கடை பணியாளர்கள் வசம் ஒப்படைத்து பயனாளிகள் பயன்பெறலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்